அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவேண்டி வேளாண்மைத் தொழில் நுட்பப்பள்ளி அவசியம் அல்லவா? ஆகவே, அதை உடனடியாக சர்க்காரே ஆரம்பிப்பதற்கான ஏற்பாடு இனிமேலாவது செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்பே விளக்கமாகச் சொன்னேன். விவசாயக் கல்லூரியில்தான் விவசாய முன்னேற்றத்திற்கு வேண்டிய பாடத் திட்டங்கள் அமைகின்றன. அக்ரிகல்சரல் பாலிடெக்னிக்கில் இந்த அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் பற்றிய அறிவாற்றலைக் கொடுப்பது, மெஷினரிகளை எப்படிச் செப்பனிடுவது போன்ற பாடத்திட்டம்தான் அதிலே வைத்திருக்கிறார்கள். அது ஏற்கனவே வைக்கப்பட்டிருந்தும் ஆதரவு இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டது.

திரு. பி. எஸ். மணியன் : மதுரை மாவட்டம், டி. கல்லுப்பட்டியில் ஆர்.இ.டி.சி. என்னும் அரசாங்க நிறுவனம் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்துவருகிறது. லாபகரமாகவும் இருக்கிறது. அதேமாதிரி பல இடங்களில் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்குள்ள நிறுவனத்தைப் பற்றிய தகவல் இல்லை. விவசாயக் கருவிகள் உற்பத்தி செய்வதற்கு நாமே திருச்சியில் அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் ஒர்க்ஷாப் வைத்து, அங்கே பல இலட்ச ரூபாய்க்கு ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது.

பி.ஓ.எல். பட்டப் படிப்பு

***484 வினா.—திரு பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.ஓ.எல். பட்டப் படிப்பு எந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது?

(இ) மறுபடியும் துவக்குவது குறித்து அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சென்னைப் பல்கலைக் கழகம் கடைசி முறையாக 1959 செப்டம்பரில் பி.ஓ.எல். தேர்வை நடத்தியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். பட்டப் படிப்பு இன்றும் உள்ளது. அந்தப் படிப்பை அப்பல்கலைக்கழகம் எடுத்துவிடுகிற செயற்குறிப்பு எதுவும் இல்லை. மதுரைப் பல்கலைக் கழகம் பி.ஓ.எல். பட்டத் தேர்வை நடத்துவதில்லை.

(இ) பல்கலைக்கழகங்கள் அப்பட்டப் படிப்பை மீண்டும் கொண்டு வருவது குறித்து பல்கலைக் கழகங்களே ஆலோசிக்க வேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, முன்பு வித்வான்கள் என்று அழைக்கப்பட்ட புலவர்கள், இனி புலவர்கள் என்றே அழைக்கப்படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். அது எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும்? முன்பு வித்துவான்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் இனி புலவர்கள் என்று அழைக்கப்படுவார்கள் என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வித்துவான் எனப்படுபவர்கள் புலவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. ஏனோ அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். இது ஒரு சாதாரண கோரிக்கையாகும். நம்முடைய அரசு பல்கலைக்கழகத்திற்கு இதைப் பற்றித் தெரிவித்திருக்கிறது. பல்கலைக் கழகம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுவதாக முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் அதுபற்றிய செயற்குறிப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

ஹாஜி மா. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, பி.ஓ.எல். படித்துவிட்டு தமிழ் ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்களுக்கும், ஆங்கிலமும் கற்றுத் தமிழ் ஆசிரியர்களாகப் பணி புரிபவர்களுக்குமிடையே ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்ற குறைபாடு இருக்கிறது. ஆகையால், தமிழில் படித்துப் பட்டம் பெற்ற அவர்களுக்கும், ஆங்கிலத்திலே படித்துப் பட்டம் பெற்ற இவர்களுக்கும் இடையே ஊதியத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் நம்முடைய அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பி.ஓ.எல். படிப்பு வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் கேள்வி. ஆனால், சம்பளம் நிர்ணயிக்கும்போது தமிழாசிரியர்களைப் பொறுத்து, கிரேடு–1, கிரேடு–2 என்று வைக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் என்ன என்ன க்வாலிபிகேஷன் வேண்டும் என்றும் போடுகிறார்கள். அந்தப் பிரிவுப்படிதான் சம்பளம் நிர்ணயிக்கிறார்கள். ஆங்கிலம் படிப்பவர்களுக்குக் குறைவு, தமிழ் படித்தவர்களுக்குக் குறைவு என்பதல்ல. எந்த எந்த க்வாலிபிகேஷனை நாம் எந்தெந்த கிரேடுக்கு வைக்கிறோமோ அந்த கிரேடின் படி சம்பளம் கொடுக்கப்படும்.

Thiru K. VINAYAKAM: Consequent on the abolition of the B.O.L. Course, what is the substitute course which the University of Madras is having ? Is the syllabus of the B.O.L. on a par with the syllabus of the Vidwan Course ? Whis is the better of the two ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பி.ஓ.எல். பாடத் திட்டத்தைப் பற்றி குறிப்பு எதும் இல்லை. ஆனால், இன்டர்மீடியட் எடுத்துக்கொண்டு அதை முடித்தவுடன் பி.ஏ. படிக்க வேண்டும் என்று வைத்தார்கள். இப்பொழுது புகுமுகப் படிப்பை முடித்தவுடன் பி.ஏ. இலும், எம்.ஏ. இலும் தமிழ் படிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, பி.ஓ.எல். படிப்பு வேண்டாம் என்று எடுத்திருக்கிறார்கள். இப்போதே மற்ற பட்டப் படிப்பிலே வசதி இருப்பதால் பி.ஓ.எல். தேவை இல்லை என்று நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் முடிவு செய்திருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே, தமிழ் லிட்ரேச்சர் எம்.ஏ.–க்கும் இங்கிலீஷ் லிட்ரேச்சர் எம்.ஏ.–க்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது என்பதுதான் முன்னே வந்த கேள்வி. அமைச்சர் அவர்கள் கிரேடுவாரியாகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி அந்த கிரேடு வித்தியாச ரீதியில் ஏற்படுத்தி இருந்தால், அதுவே தவறு தானே, அதைத் திருத்துவதற்கு ஆட்சி முன்வருமா ? மொழிகளிலே, அதுவும் நாட்டு மொழிக்குத் தாழ்வும், அயல் மொழிக்கு உயர்வும் காட்டும் கிரேடை மாற்றுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எம்.ஏ.–யைப் பற்றித் தகவல் இல்லை. நான் தமிழாசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். தமிழாசிரியர்களைப் பொறுத்து, முதல் கிரேடு, இரண்டாம் கிரேடு என்று இரண்டுவிதமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். 1948–ம் ஆண்டிலிருந்து அதை அமல் நடத்தி இருக்கிறார்கள். அதிலே முதல் கிரேடுக்கு எவ்வளவு தகுதி, இரண்டாவது கிரேடுக்கு எவ்வளவு தகுதி என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்குச் சம்பள விகிதம் இருக்கிறது. அதிலேதான் போராட்டம் என்று சொன்னார்கள். அதை எப்படி மாற்றுவது என்பது எனக்குத் தெரியவில்லை. இரண்டு க்வாலிபிகேஷன் இருக்கும் வரை இரண்டு சம்பளம் இருந்துதான் தீர வேண்டும். எம்.ஏ.–ஐப் பற்றித் தகவல் இல்லை.

குழந்தைகளுக்கு பொருட்காட்சிசாலை.

*485 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் மியூசியம் ஒன்று ஆரம்பிப்பதற்காக முன்னாள் கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்களால் தற்போதுள்ள மியூசியம் தியேட்டருக் கருகில் அஸ்திவாரக்கல் போடப்பட்டதைத் தொடர்ந்து வேலை ஆரம்பிக்கப் படாததற்கான காரணங்கள் யாவை ?

(இ) இந்த மியூசியம் எப்போது எங்கு ஆரம்பிக்கப்படும் ?